# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - அகூ ] யாழ்ப்பாணம்:- பிங்கள ஞு மார்கழி மீ க-உ வெள்ளிக்கிழமை ( 16 - 12 - 1977 ) [இல: ருரு


# எல்லாத்துறையிலும் இலங்கிய இராமநாதவள்ளல்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்.

## திருவாதவூரடிகளும் மார்கழித் திருவாதிரையும்

திருவெம்பாவை வேளை என்றால் மனம் சிவன்பால் உருகும் பெருநாள். கசிந்துருகப் பாடுவதெங்ஙன் கைகூடும் என்று எண்ணுகின்றவர்களுக்கும் வழிகாட்டும் திருவாசகத்தையும் அந்த அருள் வாசகத்தைத் தந்த அடியாரையும் உள்ளத்தால் உன்னுவதற்கு உன்னதமான காலம் மார்கழித் திங்கள் அத்தகைய உத்தம வேளையிலே சிவானுபவ சீலராம் மாணிக்கவாசக சுவாமிகள் பெருந்திறனை அறிந்து அகம் மகிழ்தல் ஆன்ம சுத்தியாய் அமையும்.

அன்பராய் நாம் அவனியில் வாழ்வதற்கு தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் வழிகாட்டுவதை ஈண்டு கருத்தில் வைப்பாம்.

"வாதவூர் அன்பர் மலர்வாய்ப் பிறந்த
திருவா சகமிங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமுங் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே,

இந்தக் கருத்தை எந்தச் சமயத்தவரும் எடுத்

( வளர்ச்சி 2 - ஆம் பக்கம் )



திருக்கேதீச்சரத்தில்

## திருவாசகப் பெருவிழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் திருக்கேதீசுவரத்தில் திருவாசக மடத்தில் திருவாசக விழா 17-12-77 சனிக்கிழமை முதல் 22-12-77 வியாழக்கிழமை வரை நிகழும்.

இவ் விழாவில் தினமும் புராணபடனம். பத்திப் பாடல்கள் திருவாசகம் ஓதுதல், சிறப்புச் சொற்பொழிவு என்பன நிகழும்.

x x x

திருவெம்பாவைப் பூசையும்

## திருவாதவூரடிகள் புராணபடனமும்

திருவருளை முன்னிட்டு வழமைபோல சைவ பரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 17-12-77) சனிக்கிழமை முதல் திருவெம்பாவைப் பூசையும் திருவாதவூரடிகள் புராணபடனமும் தினமும் மு. ப. 9 மணி தொடக்கம் நடைபெறும்.

x x x

## மணிவாசகர் விழா
### தமிழக அறிஞர் வருகை

காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடாத்தப்படும் 23-வது மணிவாசகர் விழா இம்மாதம் 21-ந்திகதி புதன்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இவ்விழாவினை அண்ணா

## இலங்கையின் இணையற்ற தலைவர் என்றால் இவ்வுத்தமரே

வாழ்வாங்கு வாழ்ந்து மொழியையும் மதத்தையும் நாட்டுவளத்தையும் காத்த மகோன்னத மனிதர்கள் வரிசையில் வள்ளல் இராமநாதன் உயர்ந்த தரத்தில் விளங்கினர் என்பது உலகறிந்த உண்மை பூரண வாழ்க்கைப் பொலிவுற்றவர் இவர் என்பதை இராமநாதமான்மியம் என்ற நூல் இனிமையாக எடுத்துக் காட்டுகின்றது.

இளைஞர்களாயுள்ளவர்கள் இராமநாத இலட்சியத்தை அறிவது மிகவும் வேண்டப்படுவதொன்று. பேரறிவு படைத்த பெரியார் வரலாற்றை அறிவது பெரும் பேற்றைக் கொடுக்கும். ஆகையாலே கற்பவை கற்று அவ்வாறு நிறைவே நெறியென்றுணர்ந்து வாழ்ந்த இராமநாத வள்ளலைப் பற்றி உற்றுக் கேட்டால் எம் நாடுய்ய வழியை நாம் காண முடியும். எனவே இராமநாத ஏந்தலைப்பற்றி அன்னாரின் குருபூசை வேளையில் எண்ணுவது பொருத்தமானது.

### ஏன் பிறந்தார் இவர்

ஏர்பெறு மநுநூல் செல்ல இலங்கையும் அரசும் வாழப்
பார்பெறு தருமந் தேங்கப் பாவலர் கலிகள் நீங்கச்
சீர்பெறு சைவ மோங்கச் செந்தமிழ் சிறந்து பொங்கப்
பேர்பெறு மறையோர் மல்கப் பெருநில மகள்க ளிக்க.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## நிறுவியவர் நினைவு நாளில் அதிபரின் நன்றி

சென்ற திங்கட்கிழமை இராமநாதன் கல்லூரியில் நிகழ்ந்த நிறுவியவர் நினைவுவிழா வடமாநில வித்யாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் தலைமையில் நடந்தபொழுது கல்லூரி அதிபர் திருமதி ம. அருணாசலம் அவர்கள் நிறுவியவரின் இலட்சியத்தைப் பற்றிக் கூறும்பொழுது:

"கீழ்த் திசையின் ஆத்ம ஞானமும் மேற்றிசையின் இலௌகிக ஞானமும் ஒன்றிணைந்த கல்வியின் மூலம மக்களின் சிந்தனையை உயர்த்திவிட முயன்ற பெரியார் என்ற வகையில் எம் நிறுவுநரை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூரும் கடப்பாடுடையோம். கல்வியின் மூலம் உள்ளச் சமநிலை பெற்ற உயர்மக்களை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையுடன் அவர் செயலாற்றினர். கல்வியறிவு பெற்ற பெண்களே இல்லறத்தை நல்லறமாக்கவும், நன்மக்களை உருவாக்கவும் வல்லவர் என்ற எண்ணத்தினால் நம்பிபர்க்கெனப் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவுவதற்கு முன்னரே நங்கையர்

[வளர்ச்சி 2-ம் பக்கம்]

## கண் பார்வையற்ற மாணவி திறமைச்சித்தி

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி 7ம் வகுப்பு மாணவி செகசோதி வைத்திலிங்கம் என்ற கண் பார்வையற்ற மாணவி சைவபரிபாலன சபையார் நவம்பர் மாதம் நடத்திய சைவசமய பாடப் பரீட்சைக்குத் தோற்றித் திறமைச் சித்தி பெற்றுள்ளார்.

மலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பண்டித வித்துவான், தொல்காப்பியச் செல்வர், சித்தாந்த நன்மணி, தருமபுர ஆதீனப் புலவர் உயர்திரு கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., அவர்கள் ஆரம்பித்துவைத்துச் சொற்பெருக்காற்றுவார்.

## சைவ பரிபாலனசபை சைவசமயப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் கடந்த நவம்பர் மாதம நடத்திய சைவ சமயபாடப் பரீட்சைப் பெறுபேறுகள் எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாத பாடசாலைகள் பரீட்சைக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளலாம.

சி. சிவரத்தினம்,
பரீட்சைக் காரியதரிசி.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

— நாவலர்

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிங்கள ஹு மார்கழி மீ க-வ வெள்ளி

# சென்று தேய்ந்து இறுதல்!

காற்று, கடுமழை இவை ஒருபுறம்; களவு கொலை முதலிய வன் செயல் இன்னொரு புறமாக நலிந்து வாழும் மக்கள் தொழில் செய்து வாழ்க்கையை நடத்தலாம் என்றால் அதுவும் முடியாத காரியம் ஆகிவிட்டது.

பொது மனிதன் பலவிடங்களுக்கும் சென்று பொருள்தேடவேண்டும். வேற்றிடங்களுக்குச் சென்றே வேலை செய்ய வேண்டும். இதற்குப் போக்குவரத்துக்குப் பொதுச் சேவையையே நம்பியிருக்கின்றான்

மாணக்கர் பலவேறிடங்களுக்குப் போய்க் கல்வி பயிலுதல் வேண்டும். அவர்களுக்கும் பயணத்துக்குப் பொதுச் சேவையே தேவை.

நோயாளர் வைத்தியசாலைகளுக்குச் செல்லவும் மருந்துபெறவும் பொதுப்போக்குவரத்துச் சேவையை காத்துக்கொண்டிருப்பர்,

ஆகவே உணவுபோல உடைபோல உறங்குவதற்கு இல்லம்போல அத்தியாவசியமாக நாடோறுப் தேவைக்குரியதாம் இருப்பது போக்குவரத்துச்சேவை, ஆனல் இந்தக் கைங்கரியம் மெல்ல மெல்லக் கிடைத்தற்கரியதாய்த் தடைப்பட்டு வருகின்றதைப் பார்க்குமிடத்து நாளடைவில் இது அற்றுப் போகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. சென்று தேய்ந்து இறுதல் என்ற நிலைக்கு வந்துவிட்டது இலங்கைப் போக்குவரத்துச் சேவை.

முன்னேற்றம் இல்லாவிட்டாலும் சாதாரணமாய் ஆவது இந்தச் சேவையிருந்தாலும் ஓரளவுக்கு ஆறுதலாய் இருக்கும். போக்கும் வரத்தும் இல்லாத பொல்லாத நிலைமையில் மக்கள் திக்கற்று நிற்கின்றார்கள்.

வீதிதோறும் உள்ள விசை வண்டி நிறுத்தும் இடங்களில் எல்லாம அதிகாலை தொடக்கம் பிரயாணிகள் நூற்றுக் கணக்காகப் பல நாழிகைப்பொழுதாக இலவு காத்த கிளி போல ஏங்கியபடி இருப்பதை அரச அதிகாரிகள் அவதானிக்கவில்லையா? தேச சேவைக்கெனத் தேசிய அரச பேரவைக்குச் சென்றிருக்கும் உறுப்பினர்கள் உற்றுப் பார்க்கவில்லையா? பயணத்துக்கு ஒரு மணித்தியாலம் காத்து நிற்பதற்கு இரண்டு மணித்தியாலம் என்றால் இது என்ன விகடம!

வீதியில் வண்டி தோற்றியவுடன் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு அதை அணுகும் பிரயாணிகள் அதற்குள் நுழைவதென்றால பெருங்கோயில்களிலே திருவிழா நாட்களில உள்ளே செல்லும் சிரமம்போலவிருக்கும். ஆடு மாடு அடைக்கப்படும் பட்டியென்றாலும ஓரளவுகளுத்தான மிருகங்கள் அங்கு இருக்கும். ஆனல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வாகனங்களிலோ, பேரதிசயம்! நெருக்கடி நிலைமையே என்றும் நிலவும்.

ஏன் இந்த இழுக்கு? இதைத் திருத்த வழியில்லையா? தனியார் சேவைக்கும் இடங்கொடுத்தால் இந்த அரச அதிகாரத்திலுள்ள சேவை திருந்த மாட்டாதா?

தனிப்பட்ட வாகனங்களில் யாராவது பயணஞ் செய்தால் அவற்றை வழிமறித்துப் பாடிகாவலர் அடைபுறுத்துவதாலே தனியார் சேவையும் நின்றுவிட்டது.

தேசிய அரச பேரவை உறுப்பினர்களே! இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு வாளா இருக்க உங்களுக்கு மனம் இடங் கொடுக்கின்றதா?

## ஒருவகை உரைத்தருள்!

இராகம் : தோடி — தாளம் ஆதி

பல்லவி

உன்புகழ் பாட ஊழ்வினை யோட
ஒருவகை யுரைத்தருள் சரவண்பவ னே (உ)

அநுபல்லவி

மின்னெடு வேலா விடையவன் பாலா
கன்னியர் லோலா கற்பக சீலா (உ

சரணம்

பாவியற் செந்தமிழ்ப் பணிபல வாற்றி
மேவிய வைம்புல வேடரை மாற்றி
பூவொடு நீர்கொண்டு பொன்னடி போற்றி
ஓவிய மந்திர ஒளிவிளக் கேற்றி. (உ)

"அருட்கவி சீ. வி"

## எல்லாத் துறையிலும்

( -ஆம் பக்கத்து வளர்ச்சி)

### எப்பொழுது இந்நிலத் துதித்தார்

உன்னுமிக் கலியு கத்தில் உற்றநா லாயி ரத்துப்
பன்னிய தொழாயி ரத்தைம் பானிரண் டொருங்கே செல்ல
மன்னுற வருவ்வி ரோதி கிருதெனும் வருடந் தன்னிற்
றுன்னுசித் திரையில் ஐந்திற் றுலங்கிய புதவா ரத்தில்.

### கோள்கள் எங்கு குலவிய

மேடமா மதியின் சோதி மீனலக் கினத்திற் செவ்வாய்
கூடமால் காரி வாக்குக் கூறுமைந் தினிலே ராகு
நீடவோ ரேழிற் பொன்மேல் நிலவுபன் னிரண்டிற் சுங்கன்
நடவே நவமாங் கோள்கள் நன்னிலை யாக நிற்ப.

### இவர் பாக்கியம் யார்க்கு

நோக்குற நம்மோ டொன்றுய் நுவன்மனு நூல்நே ராக்கிக்
காக்குறக் கலியிற் காவற் கடவுள்வந் துதித்த வாபோற்
றேக்கிய கருணை செய்வான் தென்இலங் கையர்க்கோ யார்க்கும்
பாக்கிய மாகப் பாலன் பாரில்வந் துதித்தா னம்மா.

### நூல்கள் எவை இவர் நுகர்ந்தார்

சீரியநான் மறையாதி முதனூல்கள் அத்தனையுந் தெளித்துக் காட்டும்
ஆரியமாம் வடமொழிதான் தென்மொழியா டெம்மொழிக்கு மழகு செய்ய
நேரியமேன் மொழியாமென் றுணர்ந்துவியா சரணமுடன் நின்ற மற்றும்
தேரியநூற் கலைகளைநற் குருமுகமாய்த் தனதுமனந் தெவிட்டக் கற்றும்

ஏய்ந்தபல புலவருடன் அணிமதுரைச் சங்கமமர்ந்திறை வன்முன்னுள்
ஆய்ந்ததமிழ் ஓஇனிமை பெற்றிணையற் றிருந்ததென்ன அகத்துட் கொண்டு
தோய்ந்தபொருள் தருக்கமுடன் காவியமும் இலக்கணமும் துமர் ஞானம்
வாய்ந்தபல நூல்களுமாய்க் கற்றதுமைச் செந்தமிழை வரைப் புகண்டும்.

### நியாயதுரந்தரர் ஆகும் நியமமும் நெறியும்

என்றகதிர் அளந்திடுமோண் டாயிரத்தி பெண்ணூறொ டெழுபான் மூன்றில்
ஆன்றவிரு பானிரண்டாம் வயதிலிந்த அவனிமுற்றும் அதிசயிக்க
வான்றவமாய் மனுநூலுள் விரித்தெடுத்துக் கூறுபிரமாணமெல்லாம்
தோன்றவெவர் எவரினுந்தான் உயர்ஞாய துரந்தர னுய்த் துலங்க வந்தான்

## திருவாதவூரடிகளும் மார்கழித் திருவாதிரையும்

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

துக்கொள்வர். இறைவன் நாமத்தை இனிமையுற இயம்ப வைக்கும்பொழுதெல்லாம் உள்ளம் உருகுவது உண்மையல்லவா?

அன்பர் ஆகும் திறனன்றோ திறன். அவ்வாறு அன்பர் பணி செய்வதல்லவோ அறம். "அன்பர் பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந் தெய்தும் பராபரமே" எனத் தாயுமானுர் அமைந்து நிற்றல் காண்க.

மாணிக்கவாசக சுவாமிகளைக் குறிப்பிடும்பொழுது திருவாதவூரடிகள் புராணம் வாய்மலர்ந்த கடவுண் மாமுனிவர்

கொண்டலன கண்டனருள் கொண்டுதமிழ் பாடித்
தொண்டுபுரி அன்பர்செயல் சொன்னநெறி தன்னுல்.
[illegible] பாடுகின்றார்.

—(தொடரும்)

## நிறுவியவர் நினைவு

( 1, ம் பக்கத்து வளர்ச்சி)

க்சென இராமநாதன் கல்லூரியைய நிறுவினர், தமிழ் மரபும் பண்பும் சைவநெறியும் நிரவிய சூழலிலேயே எம் சைவத் தமிழ்ப்பெண்கள் கல்வி பயில வேண்டும் என்ற நோக்குடன் அமைக்கப்பட்டதுஎம்கல்லூரி. "பரமேஸ்வராக் கல்லூரி மாணவரின் இலட்சியம்" என்ற துண்டுப் பிரசுரத்தில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் கவனிக்கத் தகுந்தன. 'அவன் தனது உள்ளத்தைப் பழுதாக்கவல்ல தீமைகள் தன் புலன்களை அணுகாதவாறு மிகப் பாதுகாப்புடன் இருப்பான். சிந்தனைகளை உருவாக்கும் பொறியெனத்தகும் அவன் உள்ளம் தூய்மையற்ற அவாக்களும எண்ணங்களும் தோன்றிப் பெருக எக்காலத்தும் இடமளிக்காது வெறுப்பையும், துவேஷத்தையும், பகைமையற்ற முரண்பாடுகளையுமேற்படுத்தும் சொற்களை அவன் வாக்கு என்றும் வெளியிடாது இழிவான நோக்கங்களுக்கு அவன் உடலில் உள்ள கைகால் ஆகிய எந்த உறுப்புக்களும் இடம் அளிக்கா," இதலிருந்து திரிகரண சுத்தியைப் பெறுவதே கல்வியின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்ற அவரது எண்ணம் தெள்ளிதிற்புலனுகின்றது "திரிகரணசுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்" என்பதனையே இராமநாதன் கல்லூரியின் குறிக்கோள் வாசகமாக அவர் அமைத்தமையும் இதனை வலியுறுத்தும்"

தலைமையுரையிலே திரு. மாணிக்கவாசகர் அவர்கள் உலகப் புகழ்பெற்ற கலாஞானியான இராமநாத வள்ளலைப்பற்றிய எந்த விழாவிலும் கலந்துகொள்வது பெரும் பாக்கியமென் றுகுறிப்பிட்டு இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சி மகத்தானதென்றும் கூறினர்.

சிறப்புரை நிகழ்த்திய ஜனுப் M. M அப்துல்காதர் அவர்கள் இராமநாத வள்ளல் எல்லாத் தேசங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா இனங்களுக்குமுரிய பெருந்தலைவர் என்று எடுத்துக்காட்டினர்.

பரிசளிப்புரையிலே கலாநிதி வித்தியானந்தன் இலங்கைப் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதற்கு முன்னோடியான இராமநாதப் பெரியாரின் விழாவிலே பல்கலைக் கழகப் பேராசிரியரான தான் உரை யாற்றுவது பொருத்தமும் பெருமையும் ஆகும என்றார். மேலும் யாழ்வளாகததிலே விஞ்ஞானபீடம் அடுத்தாண்டு நிறுவப்படுமென்ற நற்செய்தியையும் அறிவித்தார்.

## சிதம்பரத்தில் நாவலர்

( 3. ஆம் பக்கத்து வளர்ச்சி )

றும். 'நாவலர்" என்றால் ஒருவர்தான், அவர்தான் நமது ஆறுமுகநாவலர் பெருமானேயாகுமென்றும் "பிள்ளை" என்றால் ஒருவர் தான், அவர்தான் மகாவித்வான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையாவர் என்றும் கூறினர்.

தலைமை ஆசிரியர் திரு. சுவாமிநாதன் நன்றி கூற விழா முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையில்

# நாவலர் குருபூசை விழா

[எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்]

(முன் வளர்ச்சி - 1)

நற்பொறுப்பாளர் உயர்திரு இராசேஸ்வரன் அவர்கள் காலையில் அறநிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ. சேக்கிழார் கோயில் பூசகரான திருவாளர், திருஞானசம்பந்த தேசிகர் அவர்களைக் கொண்டு நாவலர் பெருமானின் திருவுருவச்சிலைக்கு அபிடேக அலங்கார ஆராதனைகளை நடத்த வைத்தார்கள்.

'சற்குருமணிமாலை'' 10 பாடல்கள் ஓத ஒவ்வொரு பாடலின் ஓதல் முடிந்ததும் திருவாளர் தேசிகர் 10 கற்பூரங்களுக்கு தீபாராதனைகளைச் செய்து, அனைவருக்கும் திருநீற்றுப்பிரசாதம் வழங்கினார்.

மாலையில் பள்ளியின் மன்றத்தில் திருமதி மணி சீதாராமன் திருமதி சரோஜாமணியின் குழுவினர்கள் ஒருமணி நேரம் நாவலர் பெருமான் இயற்றியுள்ள கீர்த்தனைகளை இன்னிசைக் கருவிகளுடன் உற்சாகமாகப் பாடினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துணைப் பேராசிரியரான பண்டித வித்துவான் திருவாளர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள் தலைமையில் குருபூஜை விழாவின் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

நாவலர் பெருமான் இயற்றியுள்ள விநாயகர், முருகன் துதி பாடல்களையும், திருமுறைப் பாடல்களையும், ஓதுவார்கள், குரு வணக்கமாக நாவலர் பெருமான் மீது ஆசிரியவிருத்த கீர்த்தனையைப் பாடினார்.

அறநிலைய நற்பொறுப்பாளர் உயர் திரு. மு. க. இராசேசுவரன் பி. ஏ அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

திரு. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சண்முகதேசிக ஞானசம்பந்தப் பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அனுப்பி வைத்துள்ள ஆசியுரையில்,

ஈழம் செய்த தவப்பயனாய் சைவமும் தமிழும் தழைத்தோங்க தோன்றியவர் ஆறுமுகநாவலர், அவர் சமய வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர். பற்றற்றான் பற்றினைப் பற்றி தமக்குத் துணையாகக் கொண்டவர், நற்குணங்களால் அமைந்த குணக்குன்றாக விளங்கியவர் சொன்மாரியால் சமயப் பயிரை வளர்த்தவர், எளிய இனிய உரைநடை வாயிலாக சமய உணர்வையும், ஒழுக்கத்தையும் இளைஞர் உள்ளத்தில் தோற்றுவித்து என்றும் நினைத்திருக்கச் செய்தவர், அவர் ஆற்றிய சமயத் தொண்டும் மொழித்தொண்டும் இணையற்றன பதிப்புத் துறையிலும் "நாவலர் பதிப்பு'' என்று எவரும் போற்றும் நிலையில் அவர் பதிப்பித்த நூல்கள் தலையான இடத்தைப் பெற்று விளங்குகின்றன. அங்ஙனம் நற்பணியாற்றிய நல்லார் நாவலரின் நினைவுநாளைக் கொண்டாடுவது சைவமக்களின் கடமை. இன்றைக்கு நூற்றுப் பதினேழு ஆண்டுகளுக்கு முன் நாவலரால் சிதம்பரத்தில் நிறுவப்பெற்ற சைவப்பிரகாச வித்யாசாலையில் அவரது 98 ஆவது நினைவு நாள்விழா நடைபெறுவது சிறப்புடையது. இன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் நாவலரைப் பற்றிய முத்தமிழ் நிகழ்ச்சியாக அமைந்திருப்பன மகிழ்ச்சிக்குரியன, விழா சிறப்புற நிகழவும் விழாவில பங்கேற்கும் அனைவர்களும் நல்லன எலலாம் பெற்றுச் சீர் பெருகச் சிறந்துவாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கனை திருவருளைச் சிந்திக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முதுபெரும் புலவர் சென்னை திருவாளர். ஆலால சுந்தரம் செட்டியார் அவர்கள் "கலைமகள் ஆசிரியர் திருவாளர், கி. வா. ஜெகந்நாதன். எம் ஏ அவர்கள் மற்றும் சிலரும் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

மாணவ, மாணவிகளின் நாவலர், கும்மி, அபிநயம், கீர்த்தனைப் போட்டிகள், வசனநடை ஒப்புவித்தல் முதலியன நடைபெற்றன.

பண்டித வித்துவான் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ அவர்கள் தலைமையுரை வழங்குகையில், "நாவலர் பெருமான் சமயத்துறையில் பெரும் புரட்சியை செய்தவர்கள், அப்புரட்சியின் வழியினைப் பின்பற்றிய பள்ளியின் மாணவர். மாணவிகள் மிகஅழகாக புரட்சியைச் செய்து காட்டியுள்ளார்கள் என்றும் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டார், மேலும் பேசுகையில் குருபூசை விழாவை நினைவுநாள் என்று கொண்டாடக்கூடாது, நினைவு நாளை உயிர் துறந்தவர்களுக்குத் தான் கொண்டாடல் வேண்டும்

நாவலர் பெருமான் தோன்றிப் புகழுடன் வாழ்ந்தவர்கள். ஆகவே குருபூசைவிழாவென்று கொண்டாடுவது மிகமிகப் பாராட்டுதலுக்குரியதாகும் குரு என்பதற்கு கு. அறியாமையை ரு நீக்குவோர் என்பனவாகும் ஆகவே நம்மிடம் இருக்கின்ற அறியாமையை யார் நீக்குகின்றார்களோ அவர்கள்தான் குருவாகும் என்றும் நமது நாவலர் பெருமான் குருவாகவும், ஆசிரியராகவும் விளங்கி நம்மிடம் உள்ள அறியாமையை நீக்கியவர்கள் ஆவார்கள் என்றும் கூறினார்.

மேலும் பேசுகையில் நாவலர் பெருமான் எந்தப் பள்ளியிற் படித்தார்களோ, அப் பள்ளியில் ஆசிரியருமானார்கள், புறசமயப் புரட்சிதான் நாவலர் பெருமானை தமிழனாகவும் சைவனாகவும்வாழ் வாங்கு வாழ வைத்துள்ளது என்றும். 24 ஆவது வயதில் நாவலர் பெருமான் தனது ஆசிரியர் வேலையைத் துறந்தும், வாழ்க்கையையும், வேலையையும் துறந்தும், வீடுபேறுபெறும்பொருட்டு துறவு பூண்டு சமயத்துறையில் பெரும் புரட்சியைச் செய்தார்கள் என்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## நாவலர் நன்னெறியிலே

# தீட்சைக்குச் சிறப்பிடம்

[சைவசித்தாந்தப்பேரறிஞர் சு. சிவபாதசுந்தரப்பிள்ளை அவர்கள்]

(முன் வளர்ச்சி — 4)

ஆகுதித்தொகை.

1. மூலமந்திரத்தால் 108
2. பிரமாங்கங்களால் 10
3. விசேஷாற்பணம் 100 (பூர்ணாகுதியோடு)
4. தீமைகள் நீங்கி நன்மையுண்டாக 400
5. ஒவ்வொரு மாணாக்கனுக்காக 100. (பூர்ணாகுதியோடு)
6. மூலத்தினாலும் பிரமாங்கத்தினாலும் ஸ்வாகாந்தமாய் ஒவ்வொன்று.
7. இம்மந்திரங்கள் (ஹும் - படந்தமாக) மும்மூன்று.

மாணாக்கனூட்டுதல்:

பின்பு ஆசாரியர் தீக்ஷைசெய்தற்குச்சிவபெருமானிடம் உத்தரவு பெற்று மாணாக்கனுக்குப் பஞ்சகவ்வியம் கொடுத்து மேற்குவாயிலிலே தர்ப்பையை விரித்துப் போட்டு அதிற் பிரணவத்தைப்பதித்து அதற்குமேல் அவனை நிறுத்தல வேண்டும். ஏனென்றால பிரணவமானது ஆன்மாவைக் கடவுளோடு சேர்க்கும வல்லமையுடையது ஆன்மாவாகிய அம்பைப் பிரணவமாகிய வில்லில் வைத்து எய்தால் ஆன்மா கடவுளைச் சேர்ந்து கடவுளொடு ஒன்றுகும என்று உபநிடதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது

நயனதீட்சை: (நயனம்-கண்) பின்பு ஆசாரியர் மாணாக்கனை அருட்பார்வையாற் பார்ப்பார் அந்தப்பார்வை அவனுடைய ஆணவத்தின் வலியைக்கெடுக்கும். எவ்வாறுஎனில், விஷவைத்தியன் விஷந்தீர்க்கும் தெய்வமாகத் தன்னைப் பாவித்து எந்நாளும் மந்திரசெபஞ் செய்துவருவதால் மந்திர சக்தியானது அவனுடைய கண்ணில நிற்கும். அவன் விஷந் தீண்டப்பட்டவனைப் பார்க்க அப்பார்வையில உள்ள மந்திர சக்தியினால் விடந்தீரும். இதுபோலச் சிவமாகப் பாவித்துச் சிவமந்திர செபஞ்செய்துகொண்டுவந்த ஆசாரியருடைய கண்ணிலே மந்திர வியாசத்தினாலும் மந்திரசக்தி நிற்கும். அவர் பார்க்கும்போது அவருடைய பார்வை மாணாக்கனுடைய மலவலியைக் கெடுக்கும,

(வளரும்)

## சமயதத்துவம் அறியத் தீட்சை அவசியம்

" தீவினையால் சூழப்பட்டு மனித சமூகம் திசைதிசை தெரியாது சலனப்படும் காலங்களில் வாழும் வகையைக் காட்டக் கூடிய தெளிவு சமயதத்துவங்களிலேதான் உண்டு. எனவே சைவசமய மரபிலே பிறந்தவர் எல்லோரும் பருவத்தில் சமய தீட்சை பெற்று அனுட்டானஞ் செவ்வையாகப் பயின்று மரண பரியந்தம் விடாது செய்தால் மோட்சத்திற்கு வழி தேடலாம் ''

இவ்வாறு சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கம் சப்பச்சி மாவடி பிள்ளையார் கோவிலில் 7-12-77 புதன்கிழமை நிகழ்ந்த சமய தீட்சை வைபவத்திற் கூறினார்.

சிவதிரு வ. வே நடராஜக் குருக்கள் 8. பிள்ளைகளுக்கு தீட்சை வைத்தார்.

4-1-77 லும் மேற்படி கோவிலில் இன்னும் பலசிறுவர்களுக்கு தீட்சை வைக்கப்பெற்றது

## பெருமைப்படுகின்றோம்

பாடிகாவலர் துறையிற் பதவிஏணியில் அதியுயர்ந்த படிக்கட்டுத்தாற்போலவுள்ள தானத்துக்கு அயராஉழைப்பிலும் ஆற்றல் அநுபவத்தாலும உரியவர் இவர் என அரச அங்கீகாரத்தைப்பெற்றிருக்கின்றார் திரு. இராமச்சந்திரன் சுந்தரலிங்கம் அவர்கள்.

சைவப்பெரியார் திரு க. இராமச்சந்திரனின் புத்திரராகும் திரு சுந்தரலிங்கம் நாட்டுப்பணியில்நாட்டமுள்ளவர் என்பதைத் தமது கடமை ஊக்கத்தினாற் காட்டிவருகின்றனர். பாடிகாவற்றுறைக்கு ஒரு பண்பாளர் என்ற வகையிலே அமைந்திருக்கும திரு. சுந்தரலிங்கம் அவர்கள் புதிய பதவியிலிருந்து இன்னும் பல அரிய சாதனைகளைப்புரிவார் என்பதற்கையமில்லை இந்த நியமனத்தாலே பாடிகாவற்றுறை பெருமையடைகின்றது. நாட்டுமக்களும் பெருமை கொள்கின்றனர்

—ℐ—

## சோமவாரத் திருநாள்

கார்த்திகை மீ 27 - ஆந் திகதி (12-12-1977) திங்கட்கிழமை கீரிமலை நகுலேஸ்வர சுவாமி கோவிலில் காலை 10 00 மணிக்கு அஷ்டோத்தர சகஸ்ர (1008) சங்க யாக பூசை ஆரம்பமாகி சங்காபிஷேகம 2 30 மணிக்கு நடைபெற்றது. விசேட பூசையின் பின் பஞ்சமுகார்ச்சனையும் வசந்த மண்டப பூசையும் நிகழ்ந்து சுவாமி வீதிவலம் வந்தபொழுதில் விசேடமாக சிறப்பாயிருந்தது.

# ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்**

வழ இல / 13854.

சேதுநாதர் வேலுப்பிள்ளை புலோலிதெற்கு புலோலி வாதி

எதிராக

தம்பு கிருஸ்ணபிள்ளை பெண் சுவக்கொழுந்து வராத்துப்பளை பருத்தித்துறை பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978 - ஆம் ஆண்டு தை மாதம் 18ஆந் திகதி (18-1-78) புதன்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோவில்பற்று புலோலி கிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சயிலுறை, சிங்கபாகுதேவன் வழவு 'சாத்தான சீமா'' நி. பர 16½, இதில் வடக்கரைவாசியில் தெற்கரைவாசிக்கு நி பர; (4 குளி 4¾ நாலு, குளி நாலரை எல்லைகிழக்கு ஒழுங்கை வடக்கு கணபதிப்பிள்ளை பெண் பரமேஸ்வரிக்குரிய ஆதனம், மேற்கு நாகமணி சுப்பிரமணியத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு குமாரசாமி பெண் சரஸ்வதிக்குரிய ஆதனம், இவ்வெல்லைக் குட்பட்டவைகள் முழுவதும், வடக்கரைவாசக்குள் இருக்கும் கிணற்றில் அரைவாசியில அரைவாசியும வழி ராய்க்காலுரித்தும்.

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா | 1652 | 00 |
| வட்டி ரூபா 1400/க்கு 18 வீதப்படி 7-2-77 தொடக்கம் 1-8-77 வரை | ரூபா | 126 | 00 |
| | ரூபா | 1778 | 00 |
| வட்டி ரூபா 1778/க்கு 9 வீதப்படி 1-8-77 தொடக்கம 18-1-78 விற்பனவுவரை | ரூபா | 73 | 31 |
| வழக்குச்செலவு | | 150 | 00 |
| மொத்த ரூபா | | 2001 | 31 |

க. நல்லலிங்கம்

வி. எம்- ரேட் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,

பருத்தித்துறை, 12-12-77 விலைமதிப்பாளரும்.

8 16—12—77

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல ஈடு 430

அருளம்பலம் சங்கரப்பிள்ளை தெல்லிப்பளை வடமேற்கு வழக்காளி

எதிராக

நாகன் தவசியும் பெண் நன்னியும் தெல்லிப்பளை வடமேற்கு எதிரிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டில் ஈடு 430 இல வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்க அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை - ரூபா 3584 /37 பின் 15-11-75 தொடக்கம் 26-3-76 வரைக்கும் ரூபாய் 900/க்கு 9 % வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 569-40 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை மேற்கிறை கூவில் நில பர. 26 இதில வடகிழக்குப் புறமாக அண்ணமார் கோவிலுக்குமுன் கொடுக்கப்பட்ட நில பர. 2 நீக்கி இன்னும் எதிராளிகளின் பாகத்தில் ஒழித்து விடப்பட்ட குளி 13½ யும் சேர்த்து நிலபர 8 குளி 13½ நீக்கி மிகுதி நில பர இருபத்திமூன்றும்(23 குளிநாலும் (4, பனைகளும் வடலிகளும் வேம்புகளும் கமுகுசெல்லையிற் குளியிற் பங்கும் எல்லை கிழக்கு வயிரவன் சந்தனுக்கும் பெண் வள்ளிக்குமுரிய ஆதனம வடக்கு அண்ணமார் கோவில் ஆதனமும் சுப்பிரமணியம் கனகசபை பெண் சின்னத் தங்கச்சிக்கும பங்காளருக்கும் முரிய ஆதனம் மேற்கு சின்னவன் சந்தனுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனமும் பரமானந்த காந்தியினுதனமும தெற்கு காசுபிள்ளை சரவணமுத்துவினுதனமும் பங்காளரின் குறித்த காந்தியினுதனமும் இது அடங்கலில் சொரியலாய் நிலபர 7¾ யும் இதில் தென்கிழக்குப் புறமாகவுள்ள வீடு நிந்தமாகவும் இதன் பதிவு H 370/ 5.

சி செ மாரிமுத்து விற்பனவு ஆணையாளரும். விலைமதிப்பாளரும்.

விதானை வளவு,

சித்தங்கேணி 1-12-77;

80, 16-12-77

## திருவெம்பா வீதி பஜனை

திருவெம்பாவைத் திருநாட்களில் யாழ் நா. சை. சமய அபிவிருத்திக் கழகத்தினர் அதிகாலை 4 மணி முதல் வீதி பஜனையை நடத்துவர். ஸ்ரீ இராஜராசேசுவரி பேய்ச்சியம்பாள் ஆலயத்திலிருந்து தினமும் பஜனை ஆரம்பமாகும்.

17.12.77 சனிக்கிழமை அதிகாலை 5 மணி வரை யோகாசன வகுப்பு இங்கு 'யோகாசன கலாநிதி' ஸ்ரீ சிதானந்த யோகி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். சுவாமிகளின் மாணவர்கள் யோகாசனம் செய்து காண்பிப்பர்.

## பொன் இராமநாதன் விழா

பொன். இராமநாதன் விழா இளைப்பாறிய நீதி அரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் மாண்புமிகு. காமினி திசநாயக்கா தே. அ. பே. திரு. வி. தர்மலிங்கம். தே. அ. பே. திரு. பேர்னாட் சொய்சா முன்னைநாள் தே அ. பே. திரு. O. L De. கிறெஸ்டர் (இளைப்பாறிய நீதியரசர்) திரு T W. இராஜரட்ணம் (நீதியரசர்) மாண்புமிகு K. W. தேவநாயகம் தே. அ. பே. (கௌரவ நீதி அமைச்சர்) மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் (எதிர்க்கட்சித் தலைவர்) நினைவுரைகள் நிகழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

மலையார் சிரத்திடைவான் நீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடியூடு போய்ச்,
சிலையார் பொதுவில் திருநடம ஆடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே.

I went along the spinal passage through which the spring of nectar flows from the brain at the top, and saw the Supreme Light of endless Bliss dancing in the resounding hall of Wisdom (Chidambaram).

Hindu Organ

Friday, 16th December, 1977.

# HUMAN RIGHTS—HOW TO DETERMINE

It has become a conventional pattern all the world over constantly to refer to certain words and phrases without giving thought to the relevance of context. Human Rights and Socialism are among those terms that have become hackneyed by indiscriminate use. Should not some competent scholar attempt to define these oft-quoted terms and help the common man understand their significance in their true perspective.

Just as everyone claims that he alone is a socialist and all others are capitalists, the denial of human rights is disowned by every nation or community. The result is a confusion of understanding in all spheres of life.

The United Nations Organisation that has taken infinite pains to define 'Human Rights' has not, however, succeeded in seeing that the benefit of such interpretation of this all-important characteristic is enjoyed by every community, small or big and in all circumstances.

The muddle in the Middle East, the armageddon in the continent of Africa, the acrimony among the peoples of Asia, America, Australia and America all point to the fact that the enjoyment of Human Rights is yet to be realised. Should we go far to substantiate this statement? If that heinous crime of hijacking has become part of the struggle for seeking freedom, then it is not worth to be able to secure 'Human Rights.' Infringing on Human Rights to enshrine Human Rights is utterly ridiculous.

The terms 'terrorist' and 'Human Rights' cannot co-exist in the sphere of civilisation. Terrorism stands for co-ercion by violent methods and is therefore in violation of the code of human conduct. Yet, movements that brazen-facedly brave the civilised world openly proclaiming themselves to be terrorist in thought, tone and treatment seem to have received recognition in the comity of nations. If terrorism can secure a foothold in civilization then religion must have receded to the back-ground. With the extension of the sphere of activities of the terrorists by means of inhuman agencies, the threat to human civilization has increased. This is but an open challenge to humanism. And the only way to check this evil tendency is to make the people realize the value of religious living.

Human Rights' Day must in other words be the Day of Religion. Each religion has its own days of special significance. But let the TENTH DAY OF DECEMBER be a Common Day for all religions; let the clarion call of all religions be on the combined tone of human conduct. And the appeal must be followed by practical steps. Stem the tough tide of terrorism and the true spirit of human conduct will safe-guard Human Rights.

# BUDGET BATTLES OF OLD

(Extracts from the Life of Sir P. Ramanathan)

— M. VYTHILINGAM —

(continued from 9-12-77)

In the course of his speech, Ramanathan said, "The question raised by the Secretary of State is: 'Can the general revenue of the Island bear these charges?' Your Excellency says: 'Yes, the revenue is in a flourishing state, it can meet these charges' This issue happily throws out of consideration the vexed questions of, "Will the line to Haputale pay?' 'Ought the line to be to Haputale or Badulla?' 'Is it to be on the broad gauge or the narrow gauge system?' and so on. My remarks today will be confined to the one issue raised by the Supply Bill for 1888, namely, 'Will the revenue for 1888 bear, in addition to its other burdens, this burden of Rs. 300,000?' This is altogether a revenue question which is quite germane to the Supply Bill. I shall not waste the time of the Council on any other question."

He examined minutely the estimates of revenue for 1888, item by item, showed clearly how the Colonial Secretary had over-drawn them and proceeded. "I do not think I ought to trouble the Council with criticisms on other heads of revenue, I shall, to save time, admit these estimates. But I think I have shown that in the Customs, there is an over-estimate of Rs. 140,000, in pearl fishery, an over-estimate of Rs. 250,000; and in licences, an over-estimate of Rs 120,000, all aggregating to Rs. 510 000 The total estimate of revenue for 1888 would thus be reduced from Rs. 13,764,000 to Rs 13,254,000 Passing now to the expenditure side, we see it set down in the Supply Bill, as revised by the Committee, at Rs. 13,637,000, which would be an excess of expenditure over revenue of Rs 393,000 Even if the Government hauled in all the money they except from the pearl fishery, there would be a large deficit. In this state of things are we justified in charging the revenue with the interest required for the railway loan? In my humble opinion, we cannot afford to do so, and the question raised by the Secretary of State must be answered decidedly in the negative. Sir, we want every cent of the revenue of next year, I shall say the same thing of 1889. I do not want to look further ahead. What is the condition of our roads? Take the road leading from the Uva Province into the Eastern Province. It is admitted by the Government that it is in a most deplorable condition. Take the road from Balangoda to Ratnapura, that is, too, in a disgraceful state.

H. E. The Governor; "No!"

Mr. Ramanathan: "Well, I have good authority for saying so."

"Take the old Colombo-Kandy road, which every one of my friends who have to travel on it, says is in a very bad state Rumour has it that high officials have also reported to the Government on the condition of this road. I should very much like to see the reports, if any, on the subject. Then, there is the Colombo - Bope road It was a sight worth seeing to see the Director of Public Works attempting to jog along the road in a hackery. I believe two or three miles of it jolted him about so much that he returned home, sick and aching all over. (laughter) I wonder what would have happened to him had he tried a few more miles of that road. He would perhaps not have returned to tell his own tale (laughter) Why are these roads left in this state? Is it not for want of revenue? I do not expect the Government to give us new roads, but I do expect them to husband the revenue in such a way as to keep in efficient repair the roads which more prosperous days have given us. And I say that our roads generally are not kept in the state of order which the needs of traffic and communication demand But this is not all. Our broken bridges claim our immediate attention. Take the Ponnalai Causeway in the Jaffna Peninsula. It was broken in several places by the cyclone which passed over the part of the Island in 1884, I believe We are able to do nothing for it in 1885, or 1886 or 1887. And nothing would have been done, I think, even this year but for me."

H. E The Governor: "Oh! Oh!"

Mr. Ramanathan: "I do not understand these protestations Your Excellency, in your message, gave the preference, as between Toppu bridge and the Ponnalai Causeway, to the former, and it was on my interference that the sub-committee agreed to recommend the repair of the Ponnalai Causeway.

## The late Sri S. Ponnuthurai Iyer

(S SIVASUBRAMANIAM
Hulftsdorf Street, Colombo)

The passing away of the late Sri S. Ponnuthurai Iyer or Kurukkal of Sella Sannathi Temple, Thondaimanaru, also known as Mr S. Ponnuthurai, who functioned as Proctor of the Supreme Court and Notary Public, and Justice of the Peace and Unofficial Police Magistrate and, I believe as Chairman at one time of the Village Committee of the area, is a very sad event for the public, especially for the Hindus. He belonged to the hereditary priestly class who performed religious and ceremonial duties at the holy and famous shrine of Sella Sannathy for generations and was an asset to the Hindu Community, even as he was an asset to the legal profession and to the general public. His religious devotion, his good nature, his generous and charitable disposition, (by charitable I mean in the highest and widest sense), his humanness, and his spirit of compassion, his humility, and an unostentatious exercise of high souled virtues were all of a special character. In the discharge of his duties in the legal profession, he displayed solid qualities of common sense, fairness and balanced judgment. In matters relating to the welfare of the general public, he was actuated by disinterested dedication to the common weal. He appeared to be a friend of one and all and was devoid of ill-will or animosity. The words of a poet come to my mind on hearing of his death. "Full many a gem of purest ray serene the dark unfathomed caves of ocean bear."

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, December 16, 1977.

EDITOR-IN-CHIEF: R N SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org